# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

***OS.No.118/2008*** **Date: 17.03.2026**

***DW1 –*** ராமசாமி

<u>சாட்சி முன்னிலையானதின் பேரில் 12, 13, 16 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சின்னாகவுண்டர் மகன் செல்லப்பகவுண்டர் தாவாவில் எந்த தரப்பினருக்கு சம்பந்தப்பட்டவர் என்றால், அவருக்கும் தாவாவிற்கும் சம்மந்தம் இல்லை. வாதியின் கொள்ளு தாத்தாதான் சின்னாகவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டர் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் வரதப்பகவுண்டர் மகன் செல்லப்ப கவுண்டர் என்பவர் 16 முதல் 22 பிரதிவாதிகளின் தாத்தா என்பதால், அந்த உண்மையை மறைக்கும் பொருட்டு வா.சா.ஆ.1 ல் அவர் பெயர் இல்லையென்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. என் மாமனார் பழனியப்பகவுண்டர் 1977 வாக்கில் இறந்துவிட்டார். பி.வா.சா.ஆ.2 ல் பழனியப்பகவுண்டரின் வாரிசுகளின் பெயர் இல்லையென்றால், சரிதான். என் மைத்துனர் கணேசன் 1998 ல் சாலை விபத்தில் இறந்துவிட்டார். இறக்கும் வரை கணேசன்தான் 1998 வரை தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றால், சரியல்ல. என் மாமியாரும்தான் அனுபவித்து வந்தார். வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவருமே கிரிட்டேஜ் நிறுவனத்திற்கு சொத்து விற்பனை செய்யும்பொழுது பாகம் பிரிக்கப்படாத பொது குடும்ப சொத்தைத்தான் மொத்தம் 8 கிரையங்களாக விற்பனை செய்து கொடுத்தார்கள் என்றாலும், அந்த விபரம் எனக்கு நேரில் தெரியும் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தில் 2 ம் பிரதிவாதிக்கு எப்படி பாத்தியம் வந்தது என்றால், சீரங்ககவுண்டர் மகன் ஜெயராமனிடமிருந்து கிரையம் வாங்கியதால் பாத்தியம் ஏற்பட்டது. அந்த கிரைய ஆவணத்தை நான் பார்த்தது இல்லை. 2 ம் பிரதிவாதி பாகம் பிரிக்கப்படாத 1/8 பாகத்தைத்தான் கிரையம் வாங்கினார் என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதி 1998 ல் தனது மகன்கள் 12, 13 பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்த உயில் சாசனத்திலும் பொதுவில் 1/8 பாகத்தைதான் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால், எனக்கு தெரியாது. அதனால்தான் 2 ம் பிரதிவாதி பெயரும் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால், எனக்கு தெரியாது. 8 ம் பிரதிவாதி மற்றும் அவரிடம் சொத்தை வாங்கியவர்கள் கிரிட்டேஜ் நிறுவனத்திற்கு சொத்தை விற்கும்போது பாகம் பிரிக்கப்படாத 1/16 பாகத்தைத்தான் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.6 தானசெட்டில்மெண்ட் பத்திரம் அச்சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதால் அந்த ஆவணம் செல்லாது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ல் தரப்பினரான 14 ம் பிரதிவாதி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் உள்ளதால், பி.வா.சா.ஆ.3, 4, 6, 7 தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள்

செல்லாது என்றால், சரியல்ல. அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. 16 முதல் 22 பிரதிவாதிகளின் முன்னோர்கள் சுமார் 100 வருடங்களுக்கு முன்பே வெளியூருக்கு குடிபெயர்ந்துவிட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. சின்னாகவுண்டனூர் சங்ககிரி கிராமத்தில்தான் உள்ளது என்றால், சரிதான். 16ம் பிரதிவாதிக்கு 2வது இருக்கும்போதே அவரது பெற்றோர் இறந்துவிட்டார்கள் என்றால், எனக்கு தெரியாது. அவர்கள் எப்போது, எந்த ஊரில் இறந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. செல்லப்பகவுண்டர் அவருடைய 1/8 பாகத்தை சின்னாகவுண்டருக்கு கிரையம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டதாக நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. 1991 ல் கிரிட்டேஜ் நிறுவனத்திற்கு 16 முதல் 22 பிரதிவாதிகளும் 1/16 பாகத்தை விற்பனை செய்தார்கள் என்றால், சரிதான். சர்வே எண் 192 ல் உள்ள சொத்து 16ம் பிரதிவாதியின் அப்பாவிற்கு தாய் வழி பாட்டி சொத்து என்றால், சரியல்ல. சர்வே எண் 192ல் உள்ள சொத்து என் மனைவிக்கு பூர்வீகமான சொத்து என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 192ல் 16ம் பிரதிவாதி வகையறாவிற்கு பாகம் பிரித்து கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.3,4,6,7 ஆகியவை பெயரளவில் ஏற்படுத்தப்பட்டவை என்றால், சரியல்ல. மேற்படி பிரதிவாதிகளின் பாகத்தை ஏமாற்றுவதற்காக அவர்கள் ஏற்கனவே சொத்தை விற்பனை செய்துவிட்டு சென்றுவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.3,4,6,7 ஆவணங்களை பற்றி எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. அதனால் அந்த ஆவணங்கள் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சாயல்ல.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/- ராமசாமி

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.